செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணி மீ ௨௪ உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சௌமிய ஸு பங்குனி மீ உஅ உ வெள்ளிக்கிழமை (10-4-1970) [இல-உ

# திரு. சு. இராசரத்தினமவர்களின் ஞாபகம்

## அவர்விட்டுச்சென்றஎச்சம் சைவஅநாதசாலை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

நாவலர்:

நாவலருக்கும் வட்டுக்கோட்டைச் சாத்திரசாலைக்கும் ஒருவயசு. நாவலர் இரண்டொரு மாசத்தால் மூத்தவர். நாவலர் பிறந்தது 1822 இறுதியில் சாத்திரசாலை உண்டானது 1823 தொடக்கத்தில்

சாத்திரசாலை சில வருடங்களின் பின் வட்டுக்கோட்டைக் கல்லூரியாயது. கல்லூரியாய சாத்திரசாலை தொடக்க காலத்தில் பெரிதொரு இருப்புவலையை விரித்தது. கறல் விசுவநாதபிள்ளை, கின்ஸ்பரி சி. வை. தாமோதரம்பிள்ளை, (பெரிய) நெவின்ஸ், உவைம்மன், போட், பிறவுண், ஆணல் என்றின்னோரன்ன தக்க பாரிய மீன்கள் அந்த இருப்புவலையுள் சிக்கின. கிறிஸ்தமுரசம் திக்கெட்டும் செவிடுபட ஆர்ப்பரவஞ் செய்தது

தக்கன் பலமுறை ஆயிரக் கணக்கில் புதல்வர்களைப் பெற்றுத் தவஞ் செய்யுமபடி அனுப்பிக்கொண்டிருநதான். நாரதர் ஒவ்வொரு முறையும தக்கன் பிள்ளைகள் தவஞ் செய்யும் இடத்துக்குப் போய், அவர்களை வீட்டு நெறிக்குச் செல்லுமபடி மன மாற்றஞ் செயது கொண்டிருந்தார். தக்கன மனம் தளர்ந்தது. ஆண் பிள்ளைகள பெறுவதை நிறுத்திப் பெண் பிள்ளைகள் பெறத் தொடங்கினன் தக்கன்.

நாவலர் வட்டுக்கோட்டைச் சாத்திர சாலைக்கு ஒரு நாரதர் ஆயினர். சாத்திரசாலை மனந் தளர்ந்து கலலூரியாய் மாறியது. 'கல்விமான்கள் கிறிஸதவராய் வருவார்கள்' என்ற எண்ணம் குடி போயது.

நாவலர் ஐந்தாண்டுத்திட்டம ஒன்று வகுத்து, வருடந்தோறும் இருபதின்மர் கற்றுவலல உபாத்தியாயர்களையும (ஆலயவிருத்திக்குச்) சமய போதகர்களையும் வெளிப்படுத்தத் திட்டம் வகுத்தார் சைவாலயங்கள் சமய போதகர் திட்டத்துக்குப் பின் வாங்கின. கற்றுவல்ல உபாத்தியாயர் திட்டத்தைக் கண்டு, பள்ளிக்கூடங்கள் நடத்தும் பாதிரிமார் பெரிதும் அஞ்சினர்.

பாதிரிமார்:

நாவலர் மறையக் கற்றுவல்ல உபாத்தியாயர் திட்டத்தைப் பாதிரிமார் பறக்கடித்துவிட்டார்கள் கற்று

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
பாவமும்பழி பற்றற வேண்டுவீர்
ஆவிலஞ்சுகந்தாடு மவன்கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்
துள்குமின்
காவலாளன் கலந்தருள்
செய்யுமே
திருச்சிற்றம்பலம்
-திருநாவுக்கரசுசுவாமிகள்.

### நல்லூர் — கேதீச்சரம் பாத யாத்திரை

திருக்கேதீச்சரத்துக்கு நல்லூரிலிருந்து பஜனைப் பாதயாத்திரை ஒன்று அண்மையில் நிகழவிருக்கிறது நல்லூர் பசனைச் சபையினர் இப் பாதயாத்திரையை முன்னின்று நடாத்துவர் நல்லூரிலிருந்து நாவற்குழி, பூநகரிமார்க்கமாக யாத்திரை நிகழும். ந. நீ.

## சைவம் - சிவசம்பந்தம்

[நல்லூர் ஸ்ரீ கணேசவித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவரும், ஸ்ரீமத் மகாதேவா சுவாமிகளின் சீடருமாகிய ஸ்ரீ வ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் உதவியது.]

"சைவ சமயமே சமயம்;
சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி
காட்டும் இந்தக் கருத்தை
விட்டு
பொய்வந்துழலும் சமயநெறி
புகுதவேண்டாம்..."

என்று தாயுமான சுவாமிகள் கூறியருளியது இன்று நோக்கற்பாலது. சைவம சிவத்துடன் சீவன்களைச் சேர்ப்பது சிவம், மங்களம், இன்பம என்பன ஒரு பொருட்கள். சைவம் காலவரையறையுள்ளே அடங்காதது; புராதனமானது. சைவசமய நெறி ஒழுகுவோர் சிவம என்னும ஒளிமார்க்கத்திலே செலலுபவர்கள் இதனாலன்றோ மணிவாசகப் பெருமானாரும்,

"சோதியே சுடரே
சூழ்ஒளிவிளக்கே
கரிகுழற் பணைமுலை
மடந்தை
பாதியே பரனே
பால்கொள்வெண்
ணீற்றாய்..."

எனத்திருவாய்மொழிந்தனர்.

இறைவன் உருவம், அருவம் அருவுருவம் ஆகிய மூன்று வடிவங்களையுடையவர். நிஷ்களமாகவுள்ள இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினால் அவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும் பொருட்டு உருவத்திருமேனி கொள்வர்.

ஓர் ஆலயத்தின் கற்பக்கிருகத்தில் இறைவன் உருவத்தைப ஆகமமுறைப்படி பிரதிட்டைசெய்து வழிபாடு செய்தல் பண்டைக் காலந்தொடக்கமுள்ளதென்பது மகஞ்சதாரோ என்னும் மிகப்பழைய புராதன நகர் ஆராய்ச்சிகளாலறியப்படும்.

உமாதேவியார், விநாயகர் சுப்பிரமணியர், வைரவர்,

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## நாவலர் பெருமான்

— வித்துவான் ச. தண்டபாணித்தேசிகர் அவர்கள் —

முன் வளர்ச்சி —2

தியாகத்தின் சிகரம்

சொத்தை, சுதந்திரத்தை, பட்டத்தை, பதவியை, மாட்டைக் கன்றைத் துறக்கலாம் ஏன்! உயிரையுங் கூடத் துறக்கலாம். ஆனால் யாராலும் துறகக முடியாத ஒன்று இளமை நலம் என்பதை உலகம் நன்கறியும் இளமை நலம் துய்ப்பதற்காக முடியிழந்த அரசர்கள் எத்தனை பேர்? தவமலையிலிருந்து விழுந்த தவமுனிவர்கள் எத்தனை பேர்? முறைகெட்ட மன்னர்கள் எத்தனை பேர்? இந்த அருமைப் பாட்டை அறிவிக்கவே முற்றத் துறந்த பட்டினத்தடிகளும் "இளமை துறக்க வல்லேன் அல்லேன்", என்று தம்மேல் வைத்து இளமை நலந்துறத்தல் எளிதன்றெனவிளக்கியருளினர். இளமை கலத்திலீடுபட மணம்புரிந்துகொள்வதொன்றாலேயே, பணமும், பதவியும், நிலையும் நேரக்கூடியதாயிருந்தும் கல்யாண வாழ்க்கை கட்டுப்பட்ட வாழ்க்கை என்றெண்ணி இளமை நலத் தியாகஞ் செய்தார்கள் என்றால் இவர்களே தியாகத்தின் சிகரம்.

நல்லாசிரியன்

நூல்களைப் பதிப்பது அரியதொரு வேலை. அதிலும் விளங்காத பகுதியை விலக்கிவிடாமல், துணிந்து மனம் போன படியில் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று திருத்தாமல், பரந்த

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

உ
அகில இலங்கைச்

## சைவ மகாநாடு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் இவ் வருடச் சைவ மகாநாட்டை மே 11, 12, 13-ஆம் நாட்களில்நடத்துவதற்கு தீர்மானஞ் செய்துள்ளார்கள். தருமையாதீனக் கல்லூரித் தலைவர், மகாவித்துவான் முதுபெரும்புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளாரர்கள்.

### இருபாலை வீரகத்தி விநாயகர் ஆலயம்

இருபாலை ஒருபுராதன சைவக் கிராமம். நாவலர்பெருமானுடைய வித்தியாகுரு சேனாதிராய முதலியாருடைய ஜனனவூர். சிறந்த வித்துவான்களும். சைவாசார சீலர்களும் வாழ்ந்தவூர், அங்குள்ள வீரகத்தி விநாயகர் ஆலயம் மிகவும் புராதனமானது பழைய காலந்தொடக்கம் வேதாகமம் பயிற்சியுள்ள ஆதி சைவர்கள் பூசித்த தலம். பிற்காலத்தில் துரஷ்டமாக மேற்படி ஆலயம் கிலமடைந்துவிட்டது.

ஐங்கரனருளால் இப்பொழுது மேற்படி கோயில் உரிமைக்காரரும சைவாபிமானிகளும் கோயிலைப்புனருத்தாரணஞ் செய்து சித்திரை ௯ உ (22-4-70) புதன்கிழமை காலை 9-00 மணியளவில் வரும் இடப லக்கினமும் சுவாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் மகா கும்பாபிடேகக் கிரியைகள் நடைபெற ஒழுங்குகள் செய்திருக்கின்றார்கள்,

### எங்கள் அறிவித்தல்

புது வருடத்தை முன்னிட்டு சைவப்பிரகாச அச்சியந்திரசாலைக்கும், இந்து சாதனக் காரியாலயத்துக்கும் 13-4-70 தொடக்கம் 16-4-70 வரை விடுமுறை நாட்களாகும். 16-4-70 வியாழக்கிழமை மு ப. 11 மணிக்கு கைவிசேஷத்துடன் நாள் வேலையும் ஆரம்பமாகும். —அதிபர்




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஞூ பங்குனி மீ உஅ-வ வெள்ளிக்கிழமை [1970

## புதுவருட சோபனம்

சௌமியவருஷம் முடிய சாதாரணவருஷம் (13-4-70) பங்குனி மீ ருகவ திங்கட்கிழமையிரவு 9-00 மணிக்குப் புனர்பூச நக்ஷத்திரத்தில் பிறக்கின்றது. காலஞ் சென்று கொண்டிருக்கின்றது. சென்ற காலந் திரும்பி வருவதில்லை. சென்ற காலத்தில் பிழை செய்தவர்கள் கவலைப்படுவார்கள். நன்மை செய்தவர்கள் இன்பமுறுவர். காரணம் தீய செயல் துன்பத்தை விளைவிக்கும். நல்ல செயல் இன்பத்தை விளைவிக்கும். இத் தத்துவத்தை வைத்துக் கொண்டு சென்றகாலச் செயல்களை மக்கள் சீர்தூக்கி இன்புறுவதும் துன்புறுவதுமாகவிருப்பர். சென்றகாலத்தில் நிகழ்ந்த தீச் செயல்களை நினைந்து பச்சாததாபப்படுவதில் பயனில்லை. சென்றகால அநுபவங்களை நினைவில் வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் முன்னியற்றிய பிழைகளை நீக்கி வாழ முயல்வதே அறிவுடைமையாகும்.

எங்கள் கடமைகளைச் சிவ சிந்தனையுடன் புரியப் பழகிக்கொள்ளுதல்வேண்டும். சிவசிந்தனை 'நான்' 'எனது' என்னும் செருக்கையகற்றும். மனத்தூய்மையையுண்டாக்கும். மனத் தூய்மையுடன் ஆற்றுஞ் செயல்கள் செய்கின்றவனுக்கும் உலகுக்கும் நன்மையைப் பயக்கும். ஆகவே மக்கள் எல்லோரும் சிவ சிந்தனையுடையவர்களாய் வாழ்ந்தால் உலகத்தில் க்ஷேமம் உண்டாகும் யாவரும் இன்புற்று வாழ்வார்கள், வருகின்ற வருஷத்தில் யாவரும் சிவசிந்தனையுடன் கருமங்களையாற்ற சங்கற்பஞ் செய்துகொள்ளுதல் நலம். யாவருக்கும் புது வருட சோபனங் கூறுகின்றோம்.

x x x

## 82-ஆவது வருடம்

இனிப் பிறக்கும் வருடந் தொடக்கம் எங்கள் இந்து சாதனம் தமிழ் – ஆங்கில பிரசுரங்களுக்கு 82-ஆவது வயது தொடங்குகின்றது.

எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக உடையன. உலகம் ஆதி பகவனை முதலாகவுடையதென்பது தமிழ் மறைத் திருக்குறள். முழுமுதற் கடவுளாவார் சர்வசங்கார காரணராகிய சிவபெருமானே. சிருட்டி திதி, சங்காரம், ஆகிய முத்தொழில்களைப் புரிகின்ற மூர்த்திகளுக்குள் சங்காரத்தைச் செய்பவனே முழுமுதற் கடவுள். மூவர் கோனாய் நின்ற முதல்வன். அந்தம் ஆதி என்மனார் புலவர் என்பது தமிழ் ஆகம ஞானபாதமாகிய சிவஞான போதம்,

"தெய்வம் சிவனே சிவனருள் சமயம்
சைவம் சிவத்தோடு சம்பந்த மென்றான்
சைவம் வளர்க்கும் சம்பந்தமூர்த்தி"

மன்றுள்வெளி காட்டும் இம்மெய்ச் சமயத்தை நமது நாட்டில் பாதுகாக்கவும் மக்களை அச்சமய நெறியில் ஆழவழி காட்டவுமே நமது நாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஐந்தாங் குரவராகத் தோன்றினார்.

அவருடையே திருவுள்ளத்தின்படியே அவருடைய சீடர்களாலும், அபிமானிகளாலும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தொடங்கப்பட்டது. சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் பாதுகாப்பதே சைவபரிபாலன சபையின் முக்கிய நோக்கமாகும். அத் தூயநோக்கத்தை நிறைவேற்றும் சாதனங்களுள் ஒன்றாகச் சபையார் இந்துசாதனம் தமிழ் – ஆங்கிலப் பிரசுரங்களை சென்ற 81 ஆண்டுகளாக வெளியிட்டு வருகின்றனர். சிவனருளைப் பெருக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இப் பிரசுரங்கள் இந் நீண்டகாலம் தொண்டாற்றிக் கொண்டுவருவது திருவருட் செயலே.

இப்பிரசுரங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின் எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறைந்துவிட்டன. இவை நிலைத்து வருகின்றமை சிவனுடைய கிருபையினாலாகும். சபையாருடைய சைவப்பிரகாச அச்சியந்திரசாலையின் வருவாய் அரசாங்கம் வித்தியாசாலைகளைத் தேசியமயமாக்கிய பின்பு குறைந்துவிட்டது. அப்படியான நிலைமையிலும் சபையார் சைவாபிமானிகளுடைய உதவியினால் இப் பத்திரிகைகளை பிரசுரஞ் செய்து வருகின்றார்கள். எதிர்காலத்திலும் சைவமக்கள் அவற்றை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க.

## சைவ சமய அபிவிருத்தி மன்றம்

### [பிளக்பூல் - நுவரேலியா]

சைவ சமய உண்மைகளையும் சைவ சாதனங்களின் பெருமையினையும் பன்னிரு திருமுறைகளையும் மலைநாட்டிலுள்ள மக்களிடையில் பரப்புவதே சிறந்த சிவப்பணியாகும். அரன்நாமம் எங்கும் பாவினால் நாட்டில் துயரில்லை. மலைநாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் சிவனை நினைக்கவும் சிவனுடைய நாமத்தை உச்சரிக்கவும் சிவசாதனங்களைப் பேணி அணியவும் தொண்டுசெய்கின்ற நுவரேலியா மாவட்டத்தைச்சார்ந்த(பிளக்பூல்) சைவ சமய அபிவிருத்தி மன்றத்தினது தொண்டு பாராட்டுக்குரியது ஷெ மன்றம் பிரசுரஞ் செய்த கூட்டுவழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய ஒரு சிறு நூல் கிடைத்தது. நமச்சிவாயப்பதிகமும் திருநீற்றுப் பதிகமும் வேறு தோத்திரங்களும் அடங்கியுள்ளன. ஷெ மன்றம் நுவரேலியா மாவட்டத்திலும், ஆங்குள்ள ஸ்ரீ கதிரேசன் கோவிலிலும் சிறந்த சைவசமயப் பணிகளைச் செய்து வருவதோடு கூட்டுவழிபாட்டுஇயக்கத்தை எங்கும் வளர்க்கவும் அயராது உழைத்துவருகின்றது.

மலைநாட்டுப் பகுதியில் சைவசமயப் பணியாற்றும் இம் மன்றத்தையும் இதற்கு உதவியாக இருக்கும் சிவநெறிச் செல்வர்களையும் நாம் வாழ்த்துகின்றோம். இம் மன்றத்தின் தலைவராக திரு. பூ. கா கணபதிப்பிள்ளை அவர்களும், செயலாளராக திரு. அ. சின்னையா அவர்களும் அமைந்துள்ளனர்.

மன்றத்தினர் இக் கூட்டுவழிபாட்டு நூலை இலவசமாக வழங்குகின்றனர். ——

## சமயதீட்சை

நுவரேலியா கதிரேசன் கோவில் மண்டபத்தில் அண்மையில் முதியோர்கள், சிறுவர் சிறுமியர்கள்உட்பட 147 பேருக்கு பிரம்மஸ்ரீ எம். சதாசிவக் குருக்கள் சமய தீட்சை செய்து வைத்தார்கள். சமய தீட்சை பெற்ற ஒவ்வொருவருக்கும் விபூதியோடுகூடிய பட்டுப் பையும் கூட்டு வழிபாட்டுப் பிரார்த்தனை நூலும் இலவசமாக வழங்கப் பெற்றன. இவ்விடத்தில் இதற்கு முன்னரும் சமயதீட்சைநடைபெற நுவரேலியா (பிளக்பூல்) சைவ அபிவிருத்தி மன்றம் செய்துள்ளது ——

## திரு. சு. இராசரத்தினம்அவர்களின்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வல்ல உபாத்தியாயர் என்பதைப் பயிற்றப்பட்ட தராதரப் பத்திர உபாத்தியாயர் ஆக மாற்றம் வருவித்துவிட்டார்கள் அவர்கள். கற்றுவல்ல உபாத்தியாயர்களிடத்துக்குப் பச்சோந்தி உபாத்தியாயர்கள் வந்து குவிந்தார்கள். நாவலர் தாபித்த பள்ளிக்கூடத்திலேயே பச்சோந்தி உபாத்தியாயரே தலைமை உபாத்தியாயராயினர்.

வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை உதவி உபாத்தியாயராயிருக்க. காசிவாசி செந்திநாதையர் தலைமையாசிரியராயிருந்த நாவலர் வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியர் பயிற்றப்பட்ட தராதரமுள்ள கிறித்த உபாத்தியாயரென்றால்— செந்திநாதையர் வீற்றிருந்த பீடத்தில் கிறித்த சேட்டிவிக்கற் உபாத்தியாயர் குந்துவதென்றால்— பாதிரிமாரின் சாமர்த்தியத்தை என்ன என்பது? அரசாங்கக் கல்விப் பீடம் பாதிரிமாரின் அகங்கையில் அமர்ந்திருந்தது! அவர்களைக் கேட்பார் யார்? நாவலர்தாமில்லையே! நாவலர் வழி வந்தோர் நாலு திசையும் விழிசினர். அவர்களுக்கு வழி வகை தெரியவில்லை. ஆதீனத்தம்பிரான்கள்மாதிரி வாளாவிருந்தனர்.

அருணசலம்:-

நாவலர் மறைந்தது 1879 இறுதியில். 1880 க்குப் பின் தெல்லிப்பழையில் கிறிஸ்த ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை ஒன்று தோன்றியது. ஆங்கிலம் படிக்கப் பணம் இல்லாத வறிய மீன்கள் அங்கே அகப்பட்டன. ஒரு மீன் ஞானஸ்நானத் தீக்ஷைக்கு அகப்படாமல் நீண்டகாலம் தப்பிக் கொண்டிருந்தது. 1885-ல் ஆசிரியப் பயிற்சிப் பத்திரம் பெறுங்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. 'இதோ பிடி ஞானஸ்நானம்! ஓ அஞ்ஞானியே' என்ற நெருக்கம் மிகுந்தது.

1885-ல் ஒரு நாள் இரவு அந்த அஞ்ஞான மீனுக்கு நித்திரை வரவில்லை. கோழி கூவும் நேரத்தில் அந்த அஞ்ஞான மீனின் உள்ளத்தில் ஒரு சேவல் கூவினது. அந்தச் சேவல் 'சேவலும் மயிலும்' என்ற இடத்தில் வரும் சேவலுக்கினமான சேவல் போலும்! அந்த அழகிய ஞானமீன் துடிதுடித்துத் துள்ளியெழுந்தது; வலையைப் பீறிட்டுக் கொண்டு மதிலைக் கடந்து தெருவில் குதித்தது. விடிகிற சமயம் தெல்லிப்பழைத்தெருவில் குதித்தது அந்த மீன். அது காரைதீவு மீன். 'அருணசலம்' என்பது அந்த மீனின் திவ்ய திருநாமம்.

அருணசலத்துக்குத் திருநீறு பூசுகிறவர்களும் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களாக வேண்டுமென்ற பைத்தியம் உண்டானது.

மூப்பது வருடம் ஊண் உறக்கம் செவ்வனே இன்றித் தெருத் தெருவாய் அலைந்தார் அந்த மகான் அருணசலம்.

ஒரு முறை கால்நடையிற் கொழும்புக்குப் போய், சேர். அருணசலத்தைக் கண்டவர் காரைதீவு அருசலம் என்ற கதையுமுண்டு. இனிக் கதையைச் சுருக்குவோம்.

1915 தொடக்கம் 1920 வரை வெளி வந்த – இலங்கையில் உள்ள – திருநீறு பூசுகிற பயிற்சி ஆசிரியர்களனைவரும் அருணசலம் பொரித்த குஞ்சுகளே யாவர்.

### இராசரத்தினம்

அக்காலத்திலே சுகபோகியான ஒரு இளம் அப்புக்காத்து, வெகு கோலாகலமானவர், மோட்டார் பைசிக்கிளில் அடிக்கடி கீரிமலை ஸ்நானத்துக்குப் போய் வருவதுண்டு அருணசலம் அதே காலத்தில் (கோப்பாயிலிருந்த ஐக்கிய ஆசிரிய போதனாசாலையில் சைவாசிரியக் குஞ்சுகள் பொரிக்கும் பொருட்டு) கீரிமலையில் முட்டை இட்டு அடைகாத்துக் கிடந்தார். அருணசலத்துக்கு ஆங்கிலந் தெரியாது. வித்தியாதிபதியோடு தொடர்புபட ஆங்கிலந் தெரிந்த ஒருவரின் உதவி அருணசலத்துக்குத் தேவை. மோட்டார் பைசிக்கிளில் கீரிமலைக்கு வரும் அந்த இளம் அப்புக்காத்தோடு தொடர்பு வைத்தார் அருணசலம். அப்புக்காத்தும இலவசமாகவே உதவிபுரிந்தார். யார் அந்த அப்புக்காத்து?

திருவாளர் சு. இராசரத்தினம் அவர்களே. அந்த அருணசலத்தின் இலவச அப்புக்காத்து என்று சொல்லவும் வேண்டுமா?

அப்புக்காத்து இராசரத்தினம் அவர்கள், என்று சட்டசபைக்குக் கால் தூக்கி வைத்தார்களோ, அன்றே அருணசலத்தின் ஆவி அப்புக்காத்து அவர்களின் ஆவியோடு அத்துவிதக்கலவி செய்துவிட்டது. 1924 தொடக்கம் 1931 வரை சட்டசபை சேர். பொன். இராமநாதன் துரையின் செல்வாக்கில் தமிழரசாய் விளங்கியது. அவ்வளவு காலத்தையும் ஒவ்வொரு கணநேரத்தையும் வீணசெய்யாமல் பயன்படுத்தியவர்கள் கௌரவ சு. இராசரத்தினம் அவர்கள். சைவ வித்தியா விருத்திச் சங்கம் உதயமானது. அதன் உயிர்ப்பாய் விளங்கினார் திரு. இராசரத்தினம் அவர்கள பாதிரிமாரின் கல்வித் திட்ட வரம்புகள் இராசரத்தினம் என்கின்ற சண்டமாருதத்தின் முன் பஞ்சாய்ப் பறந்தன.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

## திரு.சு இராசரத்தினம்

( 2-ம் பக்கத்து வளர்ச்சி

பார்க்குமிடமெங்கும் சைவப் பள்ளிகள் முளைத்தெழுந்தன. உபாத்தியாயர்களெல்லாம் திரிபுண்டரதாரிகளாயினர். இனிக் கதையை நிறுத்துவோம். நாளொருவண்ணமாய் வளர்ந்துவந்த கல்வித் தாபனம் அனைத்தையும் அரசியற் பூதம் கபளீகரஞ் செய்துவிட்டது. கல்விகுடிபோய் விட்டது. பள்ளிகள் வெறுங் கோதுகள். இதனைச் சகியாதவர்போன்று தியாக புருஷராய் விளங்கிய திரு. இராசரத்தினம் அவர்களும மறைந்துவிட்டார்கள்.

**அநாதசாலை**

அவர்கள் விட்டுச் சென்ற எச்சம் சைவ அநாதசாலை.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

சைவ அநாத சாலையை வளர்க்கும் முறையில் வளர்ப்பதே இராசரத்தினம் அவர்களுக்குச் சைவ உலகம் செய்யும் நன்றிக் கடனும். அவர்களின் ஆவி அநாதசாலையில் உயிர்த்துக்கொண்டேயிருக்கும்.

—o—

## COMMISSION SALE

கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9271

இமையாணன் கிழக்கு, இளையதம்பி நடேசு —வழக்காளி

எதிராக

(மரணம்) கரவெட்டி வடக்கு நாகப்பர் கந்தவனம், அல்வாய் தெற்கு நாகப்பர் சுப்பிரமணியம் காலஞ்சென்ற எதிரியின் பிரதிகாரியஸ்தர்,

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970-ம் ஆண்டு வைகாசி மாதம் 4-ம் திகதி (4-5-70) திங்கட்கிழமை பிற்பகல் 4-00 மணிதொடக்கம் குறித்த காணிகளியிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று.

1. அல்வாய் மழவராயர் குறிச்சியிலுள்ள ஒந்திராய பெரிய பொலி நெற்பரப்பு $37\frac{1}{2}$ ஆளுல் ஆட்சிப்படி நெற்பரப்பு 40 குளி 6 இதில் பிரிவிடல் ஆட்சிப்படி 12ம் நம்பர்த் துண்டுக்கு நெற்பரப்பு 2 குளி $\frac{1}{2}$ எல்லை கிழக்கு வழிவாய்க்காலும் சின்னத்தம்பி சந்தையாவுக்குடைய வாதனமும், வடக்கு மயிலு வல்லிபுரத்துக்குடைய வாதனம், மேற்கு வெள்ள வாய்க்கால், தெற்கு சின்னத்தம்பியார் வயிரவிப்பிள்ளைக்குடையவாதனம்; இது முழுவதும் 15ம் 16ம் நம்பர்த் துண்டுகளுக்குள்ளிருக்கும் கிணறுகளின் பங்கும் வழிவாய்க்காலுரித்தும் பதிவு A 16/136

2. மேற்படியிலுற ஒந்திராய பெரியபொலி வயல் நெற்பரப்பு $37\frac{1}{2}$ இதற்குப் பிரிவிடல் ஆட்சிப்படி நெற்பரப்பு 40 குளி 6 இதில் 1ம் நம்பர்த் துண்டுக்கு நெற்பரப்பு 3 குளி 10 எல்லை

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் வலந்தலை காரைநகர் வடக்கில் அடைவு பிடிக்கும் வை சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1968ம் ஹூ சித்திரை மீ 1-ம் திகதி தொடக்கம் 1969 ம் ஹூ பங்குனி மீ 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ம் ஹூ வைகாசிமீ 23ம்திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் ஷை அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்; 1970 ஹூ சித்திரைமீ 7-ந் திகதி

வை. ஏரம்பமூர்த்தி
ஏலவிற்பனையாளர்
Auctioneer

எம் 11. 10, 24-4-70

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9569

பண்டாரிக்குளம் வவுனியா சின்னத்துரை தியாகராசா —வழக்காளி

எதிராக

வல்லிபுரம் இளையதம்பி, உடுப்பிட்டி தற்காலம் 4ம் யூனிற் பூமடு, பூவரசங்குளம் வவுனியா —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1970ம் ஹூ வைகாசி மாதம் 4-ம் திகதி (4-5-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று உடுப்பிட்டி இறை கேயட்டி கி. பர. 7, 7/8 எல்லை கிழக்கு சிதம்பரன் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு வல்லிபுரம் பெண் பாறுபதிக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கு நாகரத்தினம் பெண் சிதேவனுக்குடையவாதனம், தெற்கு அப்புக்குட்டி குமாரசாமிக்குடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும்.

| | | |
|---|---|---|
| தீரட்சித்தொகை — — | ரூபா | 1798 00 |
| ரூபா 1000/-க்கு 22-4-67 தொடக்கம் 11-11-67 வரை 18 வீத வட்டி | ,, | 99 60 |
| ரூபா 1897-60க்கு 11-11-67 தொடக்கம் 13-2-69 வரை 5 வீத வட்டி | ,, | 118 50 |
| | | 2016 10 |

"உமாபதி"
தும்பளை
பருத்தித்துறை,
7-ம் உ சித்திரை மீ 1970-ம் ஆ.

R. S. இராமநாதன்,
கொமிசனரும், விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்.
Comisioner of Sales, Auctioneer & Valuer

எம். 9. 10-5-70

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

கிளிநொச்சி 187 & 188 கண்டி வீதி, திருமதி வள்ளியம்மை முத்தையா அவர்களிடம் 1969ம் ஹூ எப்ரல் மீ 1-ம் திகதி (1-4-69) க்கு முன்வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970-ம் ஹூ எப்ரல் மீ 30-ம் திகதி (30-4-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

எம். 3 3, 10—4—70

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் சக்கலாவோடை காரைநகர் கிழக்கில அடைவு பிடிக்கும் குமாரவேலு கந்தசாமி அவர்களின் அடைவு கடையில் 1967-ம் ஹூ ஆனி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1969-ம் ஹூ தை மீ 31-ம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ம் ஹூ சித்திரைமீ 27-ம்திகதி திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் ஷை அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer
ஏல விற்பனையாளர்

காரைநகர். 1970-ம்ஹூ பங்குனிமீ 31-ம் திகதி
எம். 479 3. 10-4-70

கிழக்கும் வடக்கும் சின்னத்தம்பியார் செல்லையாவின் உரிமைக்காரருக்குடைய ஆதனம், மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்குடைய வாதனம். தெற்கு கதிர்காமர் சேனாதிநாதரின் உரிமைக்காரருக்குடைய வாதனம், இதடங்கலிற் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கும் 15ம், 16ம் நம்பர்த் துண்டுகளுக்குள்ளிருக்குங் கிணறுகளின் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

பதிவு A. 57/222

| | |
|---|---|
| தீர்வைத்தொகை ரூபா | 1140 00 |
| ரூபா 750க்கு 14-9-66 தொடக்கம் 16-1-67வரை 6வீத வட்டி ரூபா | 15 00 |
| ரூபா 1155க்கு 17-1-67 தொடக்கம்17-2-70 வரை 5 வீத வட்டி ரூபா | 178 06 |
| செலவு ரூபா | 198 57 |
| மொத்தம் ரூபா | 1531 63 |

V. M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
26-3-70 எம். 6 10-4-70

## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ, இல. 10214

1. வேலுப்பிள்ளை அப்பாசாமி, இமையாணன் —வழக்காளி

எதிராக

2. குஞ்சர் சித்திரன், இமையாணன், —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1970ம் ஆண்டு சித்திரை மாதம் 26-ம் திகதி (26-4-1970) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டி கோவிற்பற்று இமையாணன் குறிச்சி மனையான் தோட்டம் நிலப்பரப்பு $8\frac{1}{2}$ மேற்படி மனையான் தோட்டம் நிலப்பரப்பு 8 இரண்டும் சேர்ந்த நிலப்பரப்பு $16\frac{1}{2}$ இதற்கு எல்லை கிழக்கு: – சின்னப்பிள்ளை கைம்பெண் வள்ளிக்குரிய ஆதனமும், மறுபேருக்குமுரிய ஆதனமும். வடக்கு – முத்துக்குமாரசூரியர் கைம்பெண் மீனாட்சிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு – அப்புக்குட்டி கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு – சின்னவன் சின்னக்குட்டிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{2}$ வாசியில் 2/3 பங்கு. பதிவு இலக்கம்: A. 155/14 இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலைமதிப்பு ரூபா 9250/-

| | |
|---|---|
| தீர்வைத் தொகை: ரூபா | 4107 – 97 |
| 3000/- 10 வீத வட்டி 30-9-68 தொடக்கம் 20-1-69 – 4 மாதம் | 100 – 00 |
| 4207-97க்கு வட்டி 5% 21-1-69 தொடக்கம் 15-2-70 | 227 – 53 |
| வழக்குச் செலவு — — | 232 – 65 |
| | 4668 – 15 |

'சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
18-3-70

கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம் 7. 10-4-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. முருகேசம்பிள்ளை சுப்பிரமணியமும் பெண்
2. மனோன்மணியும், மானிப்பாய் —வழக்காளி

வழ இல. M. B. 10280 எதிராக

1. செம்பர் அப்புத்துரை, ஆனந்த வீதி, மானிப்பாய் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B. 10280-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹூ சித்திரை மீ 25-ம் திகதி (25-4-70) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4825/-ம், 7-9-68 தொடக்கம் 20-3-69 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குமளவரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 351-07

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு கடுவில் கோவிற்பற்று கடுவில் இறை "பரவட்டை" நில. பர. 5ம் $9\frac{3}{4}$ குளியும் தெற்குப் பக்கத்தில் உள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரிமையும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு மாதன் கந்தையாவின் ஆதனம், மேற்கு வயித்தி தம்புவின் ஆதனம், தெற்கு பொன்னன் அருமைத்துரைக்கும் மார்க்கண்டு சிவகுருவுக்கும் சொந்தமான ஆதனங்கள். இவையடங்கலும்.

J. A. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை
3—4—70

எம். 5 10—4—70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

குப்பிளான் 1. தற்போது M. செல்வராசாவின் மனைவியும்
2. ஏழாலையைச் சேர்ந்த கோவிந்தர் வயித்திலிங்கம் மகள் சண்முகவடிவு —வழக்காளிகள்

M. B. 6545 எதிராக

அம்புரோஸ் வெனடிற் பேரின்பநாயகம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6545ம் இலக்க வழக்கில எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம ஹூ வைகாசிமீ 4-ம் திகதி (4-5-70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 6790/-ம், 3-4-64 தொடக்கம் 7—10—65 வரைக்கும் ரூபா 5000/-க்கும் 8% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 428-31ம், இச்செலவு கணக்கால் ரூபா 150/- இறுக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை சொங்கலை கொக்கன் நிலப்பரப்பு $6\frac{1}{2}$ மனையும் வான்பயிர் செம்பயிர்களும் கிணறும், மேற்கேயுள்ள கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்காலும், கிழக்கும், தெற்கும் ஒழுங்கை, வடக்கு மரியாக்பிள்ளை யோசெப்பின் ஆதனமும், மேற்கே கத்தோலிக்க கோவில் ஆதனமுமாம், இடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

"வடிவேல் உதயம்"
காங்கேசன் துறை வீதி,
கோண்டாவில். 1-4-70

சி. ஆ. த. வடிவேலு. J. P.
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
எம், 8 10—4—70

## சைவம்-சிவசம்பந்த

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

வீரபத்திரர் முதலிய மூர்த்திகளுடைய திருவுருவங்களும் அவ்வவ்வற்றுக்குரிய ஆலயங்களில் ஆகமமுறைப்படி பிரதிஷ்டை செய்து வழிபடப்படும். அம்மூர்த்திகளுக்கும் சிவனுக்கும் பேதமில்லை.

ஒரு வாரத்தில் உள்ள ஏழு நாட்களும் சைவ சமயிகளுக்குப் புனித நாட்களாகும். ஞாயிறு சூரியனுக்கும்; திங்கள் சந்திரனுக்குமுரிய விரத நாட்களாகும். சூரியனைச் சிவமாகக் கருதி விரதம் அநுட்டிப்பது மரபு. செவ்வாய் சுப்பிரமணியருக்கும், புதன் விஷ்ணுவிற்கும். வியாழன் தெக்ஷணாமூர்த்திக்கும், வெள்ளி சுப்பிரமணியர், அம்பாளுக்குரிய விரத நாட்களாகும். சனிக் கிரக தோஷ நீக்கத்திற் பொருட்டுச் சனிக்கிழமை விரதமனுட்டிப்பார்கள். இவ் வார விரதங்களை விட, நவராத்திரி விரதம், சிவராத்திரி விரதம்; கந்தஷஷ்டி விரதம், திருவெம்பாவை விரதம் என்று இன்னோரன்ன பல விரதங்களுமுண்டு.

'அருவமும் உருவமாகி,
அநாதியாய்ப் பலவாய்
ஒன்றாய்
பிரமமாய் நின்றசோதிப்
பிளம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும்
கரங்கள் பன்னிரங்கொண்டே
ஒருதிருமுருகன் வந்தாங்
குதித்தனன் உலகம்
உய்ய"

ஐந்து திணையினுள்ளும் குறிஞ்சி நிலத்தைக் குமரனுக்குரியதாகக் கொள்ளுகின்றனர். இளமை, அழகு, நறுமணம் என்பன முருக லட்சணங்கள் எனப்போற்றுகின்றனர். இளஞ் சூரியனை "முருகா" எனக் கூறுகின்றனர். அகத்தில் ஆறு ஆதாரத்திலுள்ளும் முருகனே உறைகின்றான். மந்திரவடிவத்திலும், தியான வடிவத்திலும் அவர் எப்படி உறைகின்றான் என்பதைக் குமரகுருபரரும், பின் அருணகிரிநாதரும் அழகாகக் கூறுகின்றனர்.

(வளரும்)

## கந்தபுராண விரிவுரைகள்

மாதகல், நுணசை முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மகோற்சவ காலத்தில் கந்தபுராண விரிவுரைகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 10-4-70 வெள்ளிக்கிழமை தொடக்கம் 19-4-70 ஞாயிற்றுக்கிழமைவரை தினமும் பிற்பகல் 1 மணிக்கு இவ் விரிவுரைகள் ஆரம்பமாகும்.

விஷயங்கள்: உற்பத்தி காண்டம், திருவவதாரப் படலமும், துணைவர் படலமும். தாரகன் வதைப் படலம், அசுரகாண்டம், மார்க்கண்டேயப் படலம், அமரர் சிறைபுகு படலம், மகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவ காண்டம், தக்ஷகாண்டம், கந்தவிரதப் படலம், வள்ளியம்மை திருமணப் படலம், சைவப்புலவர்மணி த. குமாரசுவாமிப் பிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் சைவப்புலவர் க. கணபதிப் பிள்ளை பி. ஏ. சைவப்பிரசாரகர் வி. நல்லையா, யோகி. கார்த்திகேசு, பண்டிதர் வே. சங்கரப் பிள்ளை முதலியவர்கள் விரிவுரைகளை நிகழ்த்துவார்கள். [ந. நி]

## நாவலர்பெருமான்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

நூலறிவைக் கொண்டு, பல கால் நோக்கித் தெளிந்து நூல்களை அச்சிடுவது மிக உபகாரமானசெயல். இதனை எளிதில் முதன் முதலாக நிறைவேற்றித் தமிழ் நாட்டுக்கு உதவியவர்கள் ஆறு நாவலர் அவர்களே. அங்ஙனமே சிறந்த மாணுக்கர்கட்குப் போதித்து வரம்பழியாது புலமையை உண்டு பண்ணி ஞான தீபத்தை ஏற்றி வைத்த பெருந்தகையும் இவரேயாவர்.

### நாவலர் காவலர்

சமயஉலகில் நாவலர் காவலர் என்பது சுந்தரர் பெருமானைக் குறிப்பது. சுந்தரர் பெருமான் மறைந்திருந்த திருத்தொண்டர் வரலாற்றைத் திருத்தொண்டத் தொகை வாயிலாகக் கொடுத்த கீர்த்தியை உடையவர். நமது நாவலர் காவலர் அவர்கள் புறச் சமயப் படையெடுப்பால் இருளாக்கப்பட்ட சைவ உலகத்தில் திருத்தொண்டர்புராண வரலாறும், சாத்திரக் கொள்கைகளும், சமய ஒழுக்கமும நிலைபெற வழிவகுத்தவர்கள், தகுதியறிந்தேதக்கனசெய்து பாராட்டிப் பட்டஞ்சூட்டிப் பதமலர் சேர்க்கும் திருவாவடுதுறை ஆதீனம் இவர்களுக்கு "நாவலர்" பட்டம் நல்கியது. சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானசித்தியார் பொழிப்புரை, கோயிற் புராணவுரை முதலியவைகளையும் அச்சிடுவித்தது. இவ்வாறு நாவலர் காவலர்செய்த சிவப்பணிகள் பல.

இவ்வண்ணம் இறையருள் துணை கொண்டு வாழ்ந்த நாவலர் பெருமான் தமது வாழ்வின் சின்னமாக ஆனந்தக் கூத்தப்பெருமான் அருளின் விளக்கமாக சிவப்பணிகள் பயிலுமிடமாக, சைவ வீரர்கள பயிற்சிக் கூடமாக விபூதியும் உருத்திராக்கமும ஆகிய சிவசின்னங்களைக் கையாளப் பழகும் கழகங்களாகச் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலும சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினார்கள் அவர்கள் அறநெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு இன்றும் அவை நன்கு நடைபெற்றுவருகின்றன. அவர்கள் சிவப்பணி, கல்விப் பணி, சமயப்பணி என்றும் நின்று நிலவ தில்லைக்கூத்தப் பெருமான் திருவருள் புரிவாராக.

## திருவிழா ஆரம்பம்

ஏழாலை - மேற்கு துவரைக் கலட்டி - வற்றப்பளை கண்ணகை அம்மன் கோவில் முதலாம் திருவிழாவாகிய நாளை மாலை 7-00 மணிக்கு யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் திருமுறை பஜனை நடாத்தப்பெறும். இவ்வாண்டு இக் கோவிலில் நிகழும் அலங்கார உற்சவத்தில் சுப்பிரமணியப் பெருமானும் விநாயகப்பெருமானும் திருவீதி உலா வருவர்.

(ந. ஏ. நி)

## தாயகம் வருகிறார்

மலேசியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் கதாப்பிரசங்கள் செய்து பல்லாயிரக்கணக்கான மக்களின் பாராட்டையும், புகழையும் பெற்ற, வண்ணை "கானகதாவாரிதி" பிரம்மஸ்ரீ. சிவ. வை. நித்தியானசர்மா 14ம் திகதி தாய்நாடு திரும்புகிறார். அண்மையில் கும்பாபிஷேகம் நடைபெற்ற சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயத்திலும் பல பிரசங்கங்கள் நிகழ்த்தியுள்ளார்.

— —

## இசையரசு வருவார்

### தேவாரப் பண்வகுப்பு

இந்து கலாசார ஆலோசனைச் சபையார் சென்ற இரண்டாண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை நாவலர் மண்டபத்தில் தகுதியுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் பண்ணிசைப் பயிற்சியளிப்பதற்காக தேவாரமணி திரு. P. A. S. ராஜசேகரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஒரு தேவாரப் பண்வகுப்பைச் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். பயிற்சிபெறுபவர்களுடைய தேர்ச்சியை யளப்பதற்காக திருக்களர் T சுந்தரேச தேசிகரை ஈழத்துக்கு அழைத்து இடைக்காலத் தேர்வொன்றை ஷ சபையார் நடத்தப் போகின்றார்கள். இவ்வருட முடிவில் பிரபல தேவார ஓதுவார் திரு M. M தண்டபாணி தேசிகரை அழைத்து ஒரு பூர்த்தித் தேர்வு நடத்தி தராதரப் பத்திரம் வழங்குவது ஷ கலாசாரச் சபையின் நோக்கமாகும்

இவற்றுக்குரிய பூர்வாங்க ஒழுங்குகளை நிர்ணயஞ் செய்ய ஷ சபையினது உப சபைக் கூட்டமொன்று 20-4-70 மு. ப. 10 மணிக்கு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறும். திரு. R. நமசிவாயம், திரு. M. வைரவப்பிள்ளை இந்துக்கலாசார சபைக் காரியதரிசி திரு. N. நவரத்தினம் வடமாநில வித்தியாதிகாரி திரு. S. தணிகாசலம் ஆகியோர் மேற்படி உபசபை உறுப்பினராவர் திரு P. A. S, ராஜசேகரமும் கூட்டத்தில் சமுகமாயிருப்பர்.

— —

## பண்ணிசை விழா

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத் திருமுறைப் பண்ணிசை விழா சைவபூஷணம் நடேசசிவப்பிரகாசம் அவர்கள தலைமையில் மல்லாகம இந்துக்கல்லூரியில இனிது நடைபெறும். பழம பிள்ளையார் கோவிலில் விசேஷ பூசைகள் நிகழ்ந்தபின்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். ஓய்வு பெற்ற நீதிபதி திரு. M. V குமாரசாமி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை வைத்தியகலாநிதி எஸ். மாணிக்கம் சைவப்புலவர் வ. செல்லையா ஆகியவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்,

### பாராட்டு விழா

காரைநகர் இந்துக்கல்லூரி அதிபராகக் கடந்த இருபத்தெட்டாண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. ஆ. தியாகராசா அவர்களுக்கு ஓர்பாராட்டு வழங்குவதெனவும், பொற்கிழியொன்றினை வழங்குவதெனவும் ஷ கல்லூரி மண்டபத்தில் பொதுமக்கள் கூடித தீர்மானஞ் செய்துள்ளனர்.

(ந லி.)

THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following **Rates of Interest**

1. Year 9 % per annum

FOR CHARITABLE INSTITUTIONS

12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N.B. These Deposits could be Withdrawn At Any Time by Giving the Firm 30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum

or 7 „ „ — „ 7 % . „

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

6 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { „ FOR „ CHARITABLE „ INSTITUTIONS „

*Head Office:* THIRUNELVELY, **JAFFNA**

*Branch* „ : VANNARPONNAI, **JAFFNA**

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ இல: M B 10516

நீர்வேலி, அச்செழு சுவாமிநாதன் மைம்பெண் தங்கரெத்தினம் —வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், வைமன் ரோட்,
1. சண்முக குருக்கள் சோமசுந்தர சர்மாவும் மனைவி
2. இராசஇராசேஸ்வரியும்

M B 10516 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க காணும் ஆதனம் 1970ம் ஆடு மே (வைகாசி, மீ 23ம் திகதி (23-5-70) சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,175/- மேலும் 5000/- ரூபாவுககு 4-1-69 தொடக்கம் 10-5-69வரைககும் வருடமொன்றுககு 12 வீத வட்டியும், அதன் பின் முழுதொகைககும் இறுக்கும் வரைககும் வருடமொன்றுக்கு 5வீதவட்டியும் கோட்டுச் செலவு 343 ரூபா 50 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனவுக் குரிய சல[illegible]ம்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பகுதயும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேற்கின்ற "பன்றிக்கோட்டு வளவு" நிலப்பரப்பு 2, 1/8 வீடும் பயிர்களும மற்றும் அதற்குச்சேர்ந்தவைகளும, இதற்கு எல்லை கிழககு - ரோட், வடககு - துவாதசி மடத்துககுரிய ஆதனம், மேற்கு - இராமுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் உரிமைக்காரர் களினுதனம், தெற்கு - பன்றிக் கொட்டு பிள்ளையார்கோவிலுக் குரிய ஆதனம். சேர்ந்தவைகளுடன் இது முழுவதும்.

பதிவு D 124/163

வி. செ. குட்டிப்பிள்ளை
கோட் கொமிசனர்
ஏலவிற்பனவாளரும்
விலைமதிப்பாளரும்
"இராச கிரி"
643, காங்கேசன் துறை வீதி.
யாழ்ப்பாணம்.
M 12 10-4-70

## கோட்டு விற்பனவு விளம்பரம

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வீமன்காமம், தெல்லிப்பளை சரவணை நடராஜா —வழக்காளி

வழ: இல M. B. 10452 எதிராக

1. வேலுப்பிள்ளை முருகேசுவும் 2. பெண் சுபத்திரை இருவரும் அன்னசத்திர ஒழுங்கை, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10452ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆடு வைகாசி மாதம் 27-ம் திகதி (27—5—70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னால் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 19025-00 இன்னும் ரூபாய் 12000/-த்துக்கு 24-11-68 தொடக்கம் 15-7-69 வரைக்கும 10 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 531-70

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை "கட்டைத்தோட்டம், திக்கிலைடப்பு வன்னியின் வளவு, தற்புருஷன்வளவு" பர நில. இலர, 2 கல்வீடு, கிணறுடன் இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு குரு வன்னிபுரத்துக்கும் பெண் சின்னச்சிக்குமுரியவாதனம் மேற்கு குலசேகரமபிள்ளை பொன்னுஸ்வாமிக்குரிய வாதனம், தெற்கு சின்னத்துரை பெண் வள்ளிநாயகியினுதனம் இதடங்கலும் பதிவு இலக்கம் D 246/244

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.
யாழ்ப்பாணம். 4.4.70

நா. தருமலிங்கம்
விலைமதிப்பாளரும் ஏலவிற்பனவாளரும்
எம். 10 10-4-70

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 10—4—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்